Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/390 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஞு வைகாசி மீ கசு உ வெள்ளிக்கிழமை (29 May. 1964) [இல-அ]

# போரைப் புறங் கண்ட வீரன்

## பாரைக் கலங்க வைத்துச் சென்று விட்டான்

## கலங்கும் உலகின் கண்ணீர் துடைக்க கடமைவீரர்கள் தோன்றவேண்டும்

பாரதப் பரம்பரை உலகிற்கு உவந்தளித்த உத்தமன்.

பாரதத்தைப் பாரகம் பாராட்ட வைத்த 'சான்றோன்',

யுத்தக் கொடுமையால் புலம்ப வேண்டிய மக்கள்—வெதும்பித் துடித்துக் கண்ணீர் விடவேண்டிய மக்கள் தன் பிரிவை நினைந்து உருகிப் புலம்பி நிற்க வைத்த அருள் நெஞ்சன்,

சொந்தநாட்டு மக்களின் தாங்கரிய அல்லல்களைத் தீர்த்து வைக்கப் போராடி வெற்றிகண்ட பின்னர், உலகநாட்டு மக்களின் நன்மைக்காக நடுநிலைமை தவருது தீவிரமாகப் பாடுபட்ட மனிதகுல மாணிக்கம்,

மக்கள் தொண்டில் தலைநின்ற மகாத்மாவின் வழித்தோன்றல் ஜவஹர்லால் நேருவின் திடீர் மறைவு குறித்து அதிர்ந்து கலங்கும் மாந்தர் குலத்தில் யார் யாரைத் தேற்றுவது?



## சாயாப் புகழ்த் தலைவன்

[பாநெஞ்சன்]

அமைதி கொண்டு உலகுவாழ
அமைதி யின்றி நொந்தலைந்து
எமது நெஞ்சு குடிபுகுந்த வீரனே!

குண்டு வீச்சு! கூக்குரல்கள்!
கண்ட துண்ட மாயுடல்கள்!
சண்டை, சண்டை! என்ற அச்சம் இன்மையால்,

ஓட்ட மோடும் குருதி வெள்ளம்!
கோட்டை வீழ்ந்த கும்பி மேடு!
ஆட்டமாடும் ஊழிக் கூத்து! இன்மையால்

நோயில் நொந்து உயிர் பிரிந்தும்
தீயில் வெந்து உடல் சரிந்தும்
சாயவில்லை! தரணியெங்கும் வாழ்கிருய்!

## சிவப்பணியில் செல்லும் இந்துமாமன்றம்

அனுராதபுரம் கதிரேசன் கோயில் அமைப்பதற்கு அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு ஆலயத்தைஅமைப்பதற்குரிய பணிகள் முழுவதையும் அரசாங்கம் ஆலய தர்மகர்த்தாக்களுக்குக் கொடுக்கச்செய்தும், பாணந்துறைக் கந்தசுவாமி கோயிற் திருப்பணி வேலைகள் யாவும் முடிவடைந்து வர முயன்று முன்னின்றுழைத்தும் திருக்கோணேஸ்வரமும் புதிதாக அமைக்கப்படும் முன்னீஸ்வரமும் திருத்தப்பட்டு நிகழ்ந்த கும்பாபிஷேகங்களில் தலைவரும், செயலாளரும் வேறு பல அங்கத்தவர்களும் கலந்து கொண்டும், திருக்கேதீச்சரத்தில் அமைந்துள்ள சிவானந்த குருகுலத்தின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் உதவியும் ஏராளமான தொண்டுகளை நிறைவேற்றி வரும் இந்து மாமன்றத்தினரின் ஆண்டறிக்கை வெளிவந்துள்ளது.

கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையினர் சிவானந்த குருகுலம் நடாத்துவதற்கு முதல் ஆண்டில் ரூபா 4,000 கொடுத்து ஊக்குவித்தமைக்கும் 2-ஆம் ஆண்டில் ரூபா 2400 கொடுத்து உதவியதற்கும் "எமது உள்ளங்கனிந்த நன்றியைக் கூறுகின்ருேம். மேலும் மேலும் மாணவர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 600 வீதமாக நல்லூர்க் கந்தசுவாமிகோயில் தர்மகர்த்தா உயர்திரு சண்முகநாத மாப்பாண முதலியார் அவர்களுக்கும் திருமதி. சிவானந்தம் தம்பையா அவர்களுக்கும் திரு. கே. நவரத்தினம் அவர்களுக்கும் அவரின் பாரியாருக்கும் திரு. கே. சி. தம்பிராசா நெஞ்சு நிறைந்த நன்றியைக் கூறுகின்ருேம்" என்று கூறும் இம்மன்றததில் இதுவரை நாற்பத்தொன்பது சங்கங்கள் அங்கம் வகித்து அரும்பணி ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### நற்சிந்தனை

(தாலாட்டு)

வருத்தமற்ற மெய்யடியார்
மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே உன்னையன்றி
உண்டோநீகண்வளராய்

### பெரியபுராண விரிவுரைப் பூர்த்தி விழாவும் சேக்கிழார் மகாநாடும்

—0—

12-6-64 வெள்ளிக்கிழமை யன்று தெல்லிப்பழை பன்னாலை ஞானவைரவர் கோவிலில் பெரியபுராணப் பூர்த்தி விழாவும் 13-6-64 சனிக்கிழமையன்று பன்னாலை சேர், கனகசபை வித்தியாலயத்தில் சேக்கிழார் மகாநாடும் நடைபெறும் என ஞானவைரவ ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையார் அறிவிக்கின்றனர்.

## அவனன்றி ஓர் அணுவும் அசையாது

திரு. வேல், சிவசுப்பிரமணியம் எம். ஏ. தமிழ்நாடு

அண்மைக்காலம் வரை மெய்ஞ்ஞானி, அஞ்ஞானி என்ற இரு சொறகள் பயின்றுவந்தன. உலக உண்மைகளை உணர்ந்தவனை மெய்ஞ்ஞானி என்றும், அஃதுணராதவனை அஞ்ஞானி என்றும் கருதி வந்தனர். மெய்ஞ்ஞான சிந்தனை விஞ்ஞானம என்ற புதிய துறையை வளர்த்தது. விஞ்ஞானம் வளர வளர மெய்ஞ்ஞானிகள் "உண்மை" என நம்பி வந்த சில கருத்துக்கள் தகர்க்கப்பட்டன. மெய்ஞ்ஞானி; ஆத்திகன், விஞ்ஞானி, நாத்திகன் எனச் சொல்லளவில் வழங்கலாயின. உலகம் கடவுளின் படைப்பு என்று நம்பினுன் மெய்ஞ்ஞானி. சூரியனிலிருந்து தெறித்த நெருப்புக்கோளமே உலகம் என நிலைநாட்டினுன் விஞ்ஞானி. காலப்போக்கில் விஞ்ஞான முன்னேற்றத்தால் மெய்ஞ்ஞானமே பட்டுப்போகுமோ என்றஞ்சிய் மெய்ஞ்ஞானிகள் தீவிரம் காட்ட முனைந்தனர். மெய்ஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் கடும் போட்டியே இருந்து வந்தது.

விஞ்ஞான சாதனையின் திடுக்கிடும் பல புதிய கண்டுபிடிப்புக்கள் மக்கள் மன்றத்தில் விஞ்ஞானத்தின் மதிப்பை மேலும் உயர்த்திவிட்டன. 20-ம நூற்ருண்டு மக்கள் விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றனர், மெய்ஞ்ஞானம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்ற எண்ணம் பரவலாக இருந்து வருகிறது, ஆனல் மகத்தான சாதனைபுரியும் விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானமே மனநிறைவுதருகின்றது. விஞ்ஞானத்தால் தீர்வு காண இயலாத எவ்வளவோ உண்மைகளுக்கு இன்று மெய்ஞ்ஞானம் புகலிடமாக உள்ளது. இதை உணர்ந்த விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானத்தில்தான் என்று உணர்ந்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக உலகப்படைப்புப்பற்றி விஞ்ஞானத்தாலும் உணர இயலாத மறை பொருள்கள் பல உள்ளன. இந்த இயற்கைச் சக்தியைத்தான் மெய்ஞ்ஞானம் "கடவுள்" என்று குறிப்பிடுகிறது. மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்கி வருகிறது என்ற கொள்கைகளில் விஞ்ஞானிக்கும் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படுகிறது.

[இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்களை Cressy Morrison "க்ரசி மாரிசன்" என்பவரின் "மனிதன் தனித்தியங்கமுடியாது" என்னும் புத்தகத்திலும் காணலாம்.]

கீழ்க் காணும் ஏழு காரணங்கள் விஞ்ஞானிக்கும் கடவுள் நம்பிக்கை ஏற்படக் காரணமாக இருக்கின்றன.

1. உலகம் எவ்வாறு தோன்றியது? சூரியனிலிருந்து சிதறிய ஒரு துண்டம் என்பது சுருக்கமான விடை. ஆனல் உலகம் தோன்றியது தற்செய

தொடர்ச்சி 2-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

குரோதி ஆ வைகாசி மீ
கசுஉ வெள்ளிக்கிழமை

## ஜவஹர்லால் நேருவின் மறைவு

பாரத நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவராகவும் ஆசியசோதியாகவும் உலக சமாதானத் தூதுவனாகவும் தொண்டாற்றிய ஜவஹர்லால் நேரு அவர்கள் 27-5 64 அன்று இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டாரென்ற செய்தி உலகமக்கள் யாவரையும் துக்கசாகரத்தில் அமிழ்த்திவிட்டது. நேரு அவர்கள் அலகபாத் நகரத்தில் ஓர் ஐசுவரியம் நிறைந்த பிராமணக் குடும்பத்தில் தோன்றினர். தந்தையார் வடமொழியும் ஆங்கிலமும் நன்கு கற்ற ஒரு வக்கீலாகக் கடமையாற்றி வந்தமையினுல் தமது புத்திரனுக்கும் ஆங்கிலமொழியைச் செவ்வனே கற்பித்து ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வியை ஊட்டுவதற்காக அவரை ஆங்கிலேய நாட்டிலுள்ள ஒக்ச்போட் சர்வகலாசாலைக்குக் கல்வி பயில அனுப்பினுர். மேலைத் தேசக் கலாச்சாரத்தையும் கீழைத்தேசக் கலாச்சாரத்தையும் பயின்றதன் விளைவாக அவர் இருவகைக் கலாச்சாரங்களையும் இணைத்து வாழ்க்கையைத் திறம்பட நடத்தினமையால் இரு பகுதி மக்களாலும் அவரது வாழ்க்கை முறை பாராட்டப்பட்டது. அவர் மேலைத் தேசத்தில் கல்வி பயின்ற பின்பு பாரத நாட்டையடைந்து பாரத நாட்டின் விடுதலைக்காகத் தமது தந்தையாரைப் போன்று தொண்டாற்றினுர். மகாத்மாகாந்தியடிகளுடன் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காக உழைத்தனர். உயர்ந்தஉத்தியோகத்தை வகித்துப் பொருளீட்டியும் தமது பிதிரார்ச்சித சொத்தை உபயோகித்தும் சகலபோகங்களையும் அநுபவித்து ஆடம்பரமான வாழ்வை நடத்தக்கூடிய வசதிகள் பொருந்தியிருந்தும் நாட்டின் விடுதலைக்காகத் தமது செல்வமெல்லா வற்றையும் துறந்து பலவித துன்பங்களையும் அநுபவித்துக் கொண்டு வாழ்ந்தனர். காந்தியடிகளின் அறப் போரில் பங்குபற்றி நெடுங் காலம் சிறைவாழ்க்கை நடத்தினுர். சிறையிலிருக்கும் காலத்தில் சரித்திரசம்பந்தமான நூல்களை வெளியிட்டார். அந்நூல்கள் உலகமக்களுடைய நன்மதிப்பைப் பெற்றன

1947-ம் ஆண்டில் பாரத நாடு சுதந்திரமடைந்த பொழுது காந்தியடிகளின் விருப்பத்தின்படி பொறுப்புள்ள பிரதம மந்திரிப் பதவியை ஏற்று மரணபரியந்தம் அக்கடமையையாற்றினர். பலவேறு சாதிகளும் பாஷைகளும், சமயங்களும் கொள்கைகளும் காணப்படுகின்ற ஒரு நாட்டில் பிரதம மந்திரித் தொழிலையாற்றுவது மிகவும் கஷ்டமான கடமை. நேரு அவர்கள் தமது பொறுமை, நடுநிலைமை, அன்பு, கண்ணோட்டம், துணிபு, வாய்மை, அரசியல் ஞானம், முதலிய பண்புகளைத் துணைக்கொண்டு இச் சிக்கலான கடமையை யாற்றி வந்தனர். வல்லரசுகளுக்கிடையில் போர் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அவர் குறித்த நாடுகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு புத்திகளைக் கூறி போர் நிகழாவண்ணம் செய்தனர். நேரு அவர்களுடைய நடுநிலைமைக் கொள்கையையும் பஞ்சசீலப்பற்றையும் பாக்கிஸ்தான் சீனு, ஆகிய இரு நாடுகளும் அவமதித்தன. இரு சிக்கலான விஷயங்கள் அவருக்கு மனச் சஞ்சலத்தை உண்டாக்கின ஒன்று காஷ்மீர் பிரச்சினை, மற்றையது சீனுவின் ஆக்கிரமிப்பு. இவையிரண்டும அவருடைய அந்திய காலத்தில் அவருக்கு உடல் நலக்குறைவை உண்டாக்குவதற்கு மூலகாரணங்களாக விருந்தன. பாரத நாட்டில் சனநாயக ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு மூல காரணமாகவுள்ளவர் நேரு அவர்களே. கட்சிக் கொள்கை, அரசியற் கொள்கை சம்பந்தமாகத் தம்முடன் மாறுபட்டவர்களை அவர் வெறுப்பதில்லை காந்தியடிகளின் போதனைகளைச் சாதனையில் கொண்டொழுகினவருக்குள் நேரு அவர்களே தலை சிறந்தவர்.

"உள்ளத்தாற் பொய்யா
தொழுகி னுலகத்தா
ருள்ளத்தி னெல்லா முளன்"

என்னும் வள்ளுவர் வாக்குக்கு எடுத்துக்காட்டாக வுள்ளவர் நேரு. ஒருவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொய் கூறு தொழுகுவானுயின் அவன் உயர்ந்தோருள்ளத்தின் கணெல்லாம் உளனுவான். ஒருவன் எப்பணியைப் புரிநதாலும் அவன் மெய்கூறி ஒழுகுவானுயின் அவனுடைய பணி உலக மக்களுக்கு நல்ல பயனை யளிக்கும் அவனை உலகும் தெய்வமாகப் போற்றும். நேரு அவர்களின் இறவாப்புகழுக்கு அவருடைய வாய்மையே காரணமாகவுள்ளது.

x x x

## உற்சவங்களை நடத்தும் முறை

—0—

சிவபெருமான் அருவமாயெங்கும் வியாபகமாயிருக்கின்ருர். அடியவர்கள் அவரை வழிபட்டு நற்கதியடைதற்காக, அவர்தம் பெருங்கருணையினுல் உருவத் திருமேனி கொண்டெழுந்தருளுவர், சிவபெருமானின் வேறுகாத வருளே பார்வதிதேவியார். விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக்கடவுள் ஆகிய மூர்த்தங்களும் சிவபெருமானுடைய அருள் தோற்றங்களாவர். இவர்களுக்குச் செய்யும் வணக்கம் சிவபெருமானுக்குச் செய்யும் வணக்கமேயாகும். இம்மூர்த்திகளின் திருமேனிகளை அடியார்கள் தாபித்து வழிபாடாற்றுமிடங்களே ஆலயங்களெனப்படும். இத்திருமேனிகள் ஆகமவிதிகளுக்கேற்ப அமைந்திருக்கின்றன. இவைகளில் தெய்வசாந்நித்தியம் குருவின் பக்தி முறையான பூசைக்கிரமங்களினுலும வழிபடுவோரின் பக்தியினுலும் உண்டாகின்றது. ஆகவே ஓர் ஆலயத்தில் தெய்வசாந்நித்தியம் ஏற்படுவதற்குச் சைவசாத்திரங்களைக் கற்றவராகவும் ஈசுரபக்தியும நல்லொழுக்கமும் உள்ளவராகவும் ஒரு பூசகரை நியமிப்ப தவசியமாகும். வழிபடுவோரும் ஆசாரசீலராய் தூய சிந்தனையுடன் சென்று பத்தியுடன் வழிபட வேண்டும. ஓர் ஆலயத்தை திருவகிப்பவரும் சைவசாத்திர அறிவு ஈசுரபக்தி, நல்லொழுக்கம் என்பன உடையவராக விருக்க வேண்டும்.

ஓர் ஆலயத்தில் தினசரி நடைபெறும் ஆராதனை நித்தியமெனப்படும. அவ்விதம் நடைபெறும் நித்தியத்தில் புத்திபூர்வமாகவோ அல்லது அபுத்திபூர்வமாகவோ மந்திரலோபம், திரவியலோபம் முதலிய குறைகளேற்படக்கூடும். அக்குறைகளை நீக்கி மக்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும மன்னனுக்கும் நன்மையுண்டாகும் வண்ணம் நைமித்திகம் புரியப்படும். இந்நைமித்திகத்தின் அங்கமே உற்சவமென அழைக்கப்படுகிறது உற்சவம் என்பதன் பொருள் மேலான யாகம் என்பதாகும். 'இவ்வுற்சவங்களை முறைப்படி செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும், ஞானமுண்டாகும், எல்லா மங்களமும் உண்டாகும்' எனவும், அசுரர்களின் அழிவின் பொருட்டு உற்சவத்தைச் செய்க' எனவும், புத்தி முத்தியைக் கொடுபபது, சர்வான்மாக்களுக்குச் சுகத்தைத்தருவது, பரிசுத்தமானது; எப்பொழுதும் விஜயத்தைத் தருவது, சர்வசித்தியையும் கொடுப்பது, இஷ்டகாமிய பலனைத் தருவது' எனவும் ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளியிடுகின்றன

இவ்விதமான நன்மைகளை விரும்பும் அடியார்கள் உற்சவங்களை ஆகம விதிப்படி செய்ய வேணடும். அங்ஙனம் செய்யத் தவறினுல் அவர்களுக்கு நன்மையுண்டாகாது. தீமைகளே விளையும். ஆகம விரோதமாகச் செய்யப்படும் உற்சவங்கள் தக்கன் செய்த வேள்வியைப் போன்றனவாகும். பொருளைச் செலவு செய்து ஆகமவிரோதமாக உற்சவங்களைச் செய்பவர்கள் குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்பவர்களை நிகர்ப்பார்கள். சைவக் கோயில்களிற் செய்யப்படும் உற்சவங்களில் பின்வரும் அநுசிதங்களைத் தவிர்த்து இறைவனருளுக்கு ஆளாகும் வண்ணம் கோயில் அதிபர்களையும், உற்சவாசாரியர்களையும், உற்சவஞ் செய்விப்போரையும் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

1. திருவுருவங்களுக்குப் பொய்க்கை பொய்க்கால்கள் வைத்து அலங்காரஞ்செய்தலைத் தவிர்க்க வேண்டும்.

2 ஆகமங்களில் விதிக்கப்படாத புஷ்பங்களினுலும், சிலை மாலைகளினுலும் காகித மாலைகளினுலும், அழுக்கு வஸ்திரங்களினுலும் மூர்த்திகளை அலங்காரஞ் செய்தல் நீக்கப்பட வேண்டும்.

3. கோயில்களில் (தாசியர் நடனம்) சதிர்க் கச்சேரிகள் தவிர்க்கப்பட வேண்டும்.

4. வாண விளையாட்டுக்கள் தவிர்க்கப்படவேண்டும்.

5. ஒலிபெருக்கி வைத்துத் திரைப்படப் பாட்டுப் போடுதலும் பொருத்தமற்ற இசைக் கருவிகளை வாசித்துவழிபடுகின்றவர்களுடைய மனுேலயத்துக்கு இன்னல் விளைவிக்கும் செயல்களும் நிறுத்தப்படல் வேண்டும்.

6. மூர்த்திகளை மின்சாரதீபங்களால் அலங்காரஞ் செய்தலும், அவ்வளவோடு அமையாது இறைவனது திருமேனிக்கெதிராக மின்சாரச் சூழ் ஒளி காட்டுதலும் முற்ருக நீகசப்படவேண்டும்.

7. திருவிழாக்களைப் பொருத்மற்ற காலத்தில் நடத்துதல் தவிர்க்கப்படவேண்டும். அகால வேளைகளில் திருவிழாக்களை நடத்துவதினுல் இராதிருவிழா பகற் றிருவிழாவாகவும், பகற் றிருவிழா இராத் திருவிழாவாகவும் மாறுகின்றன. அதனுல் ஆசாரியர் முதலானவரது நித்தியகடன்கள் நிலைதடுமாறுமே,

ஆகம விரோதனமான முறைகளில் உற்சவங்களை நடாத்தும் திரவியத்தைக் கொண்டுவேதபாராயணம், தேவார பாராயணம் சைவ சமய விரிவுரைகள் செய்வித்தல் நன்மை பயக்கும். அவற்றினுல் மக்களுக்கு ஈசுர பகதி ஞானம பெருகும். ஓர் ஆலயத்தில்நடைபெறும எககிரியையும் மக்களுடைய பக்தி வளர்ச்சிக்குத்துணையாகவிருக்கவேண்டும். இவற்றையெல்லாம் சிந்தித்துச் சைவ மக்கள் உற்சவங்களை ஆகமமுறைப்படி செய்தல் ஆலயங்களை தெய்வ சாந்நித்திய நிலையங்களாக்கி சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விருக்கும்.

## ஆவனன்றி ஓரணுவும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லான ஒரு செயலா? தன் முனைப்பால், எதிர்பாராத விதமாகத் தோன்றியது அல்ல என்றும், ஓர் உயர்ந்த பொறியியல் வல்லமையினுல் ஆக்கப்பட்டு இயங்கி வருகிறது என்றும், உயிர்கள் தோன்றி வாழப் பல சூழ்நிலைகள் துணைபுரிகின்றன என்றும் விஞ்ஞானிகளே தெளிவுபடுத்துகின்றனர். ஒரே கல்லில் ஒருவன் ஒரு மாங்காயை வீழத்தினுன் என்ருல், அது எதிர்பாராத செயலாகவும் இருக்கலாம். ஆனுல் 100 கல்லில் 100 முறையும் குறி தவறவில்லையென்ருல் அது அவனுடைய ஆற்றலையன்ருே புலப்படுத்துகின்றது. அது போலவே உலகில் உயிர்கள் தோன்றி நிலைத்திருக்கப் பல சூழ்நிலைகள் - ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாய் - துணை புரிகின்றபோது உலகத் தோற்றம் தற்செயலானது. எதிர்பாராததுஎன்ருல் எவ்வாறு நம்ப இயலும்.

உருசியாவும் அமெரிக்காவும தங்களுடைய ஏவுகணைப் பரிசோதனைகளில் பலமுறைதோல்வி கண்டே இறுதியில் வெற்றியடைந்தன. உலகம் அதன் மையக் கோட்டில் மணிக்கு சுமார் 1000 மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஓய்வுண்டா? தடம் புரண்டதுண்டா? வேகத்திற்குன் குறைவுண்டா? பரிசோதனையாவது நடத்தியதுண்டா? உலகம் தன்னைத் தானே சுற்றும் வேகத்தில் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுகின்றது என்று வைத்துக் கொள்ளுவோம்- ஓய்வுகூட வேண்டாம். வேகம் மணிக்கு 1000 மைலிலிருந்து 100 மைலாகக் குறைகிறது என்றே வைத்துக்கோள்ளுவோம்;விளைவு! இரவு நேரமும் பகல் நேரமும் 10 மடங்கு அதிகமாகும். பகல் நேரம் அதிகமானுல் சூரியனில் வெப்பம் தாளாது பயிர்கள் செடி கொடிகள் கருகிச் சாம்பலாகிவிடும். இரவு நேரம் அதிகமானுல் பொருள்கள் உறைந்துவிடும்.

உலகில் உயிர்வாழ சூரியனும் பேருதவிபுரிகின்றது. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 12000 டிகிரி பாரன்ஹைற். இந்த வெப்பநிலை அதிகமானுலோ அல்லது குறைந்தாலோ உலகில் உயிர் வாழ்தல் அரிது. எவ்வளவு தூரம் விலகி இருக்க வேண்டுமோ அந்த

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## வைகாசி விசாகப் பாத யாத்திரை

25-5-64 திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் நல்லூர் தேவஸ்தானத்திலிருந்து சுமார் இருநூறு அடியார்கள் பாதயாத்திரையாக முருகன் படத்துடன் செல்வச்சந்நிதிக்குப் புறப்பட்டனர். தலைவர் திரு, இ. கந்தசுவாமி தலைமை தாங்கினர். யாழ் மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ், துரைராசசிங்கமும், அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையின் உபதலைவர் திரு. பொன் அப்புக்குட்டியும் இச்சபையின் சேவையைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர்.

வழி எங்கணும் வரவேற்கப்பட்ட இச்சபையினர் முருகநாம பசனையுடன் 26-5-64 காலை 6.30 மணிக்குச் செல்வச்சந்நிதியை யடைந்தனர்.

அன்று பகல் 11 மணிக்குச் செல்வச்சந்நிதி ஆனந்தாஸ்ரம நிர்வாகஸ்தர் சுவாமி மயில் வாகனமவர்களால் மகேஸ்வர பூசை நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனன்றி ஓரணுவும் அசையாது

2-ம் பக்கத் தொடர்ச்சி

அளவு விலகிஇருக்கின்றது.

உலகின் மேல்ஓடு இன்னும் 10 அடி பருவன் உள்ளதாக இருக்குமானல் உலகில் உயிர்வளி (Oxvgen) இராது. உயிர்வளி இன்றி உயிரினங்கள் உயிர்வாழ்தல் இயலாது.

உலகம் 23 டிக்ரி சாய்வாக இருப்பதும் ஓர் இன்றியமையாக் காரணம்பற்றியேயாகும். சாய்வாக இருப்பதனுல்தான் பருவக்காலங்கள் ஏற்படுகின்றன. செங்குத்தாகச் சாய்வின்றி இருக்குமானல் கடலிலிருந்து எழும் நீராவி தெற்கு வடக்காகவே பாயும். உலகின் கிழக்கு மேற்குப் பகுதிகள் பனியாக இருக்கும்.

திங்கள் அதன் தற்போதைய இடத்திலிருந்து 50,000 மைல் விலகி இருக்குமானல் கடலலைகள் அதிகமாகி உலகத்தை நீரில் ஆழ்த்திவிடும். கடலலைகளின் வேகம உலகத்தை ஒரேநாளில் இருமுறை நீரில் ஆழ்த்தும் தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

கடல்மட்டம் இன்னும் சில அடி தாழ்ந்து இருக்குமானல் கரியமில வாயுவும், உயிர்வளியும் உறிஞ்சப்பட்டுவிடும். இவ்வளிகளின்றி தாவர வகைகள் தோன்ரு.

வளிமண்டலம் (atmosphere) இன்னும் சில அடி சுருங்கி இருக்குமானல் நாளும் விண்ணில் எரியும் எரிமீன்கள் மண்ணில் வீழ்ந்து எங்கும் நெருப்பைப் பரப்பும்,

மேற்காணும் உண்மைகளால்கோள்களின் அமைப்பும் இயக்கமும் தற்செயலாக அமைந்தவை அல்ல என்பது தெளிவாகின்றதன்ரூ?

2. உயிர் என்ருல் என்ன என்று எந்த மனிதனுலும் உணரக்கூட முடியவில்லை. உயிரின் துவக்கம் எது? முடிவு எது? என்று எவராலும் எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை. ஏனெனில்உயிருக்குஉருவமில்லை. பருமனில்லை. பளுவில்லை, ஆனல் உயிரின் ஆற்றலை மட்டும் காணமுடிகின்றது. ஒரு சிறிய கொடியின் வேர், வலிய கற்பாறையையே பிளக்கிறது என்ருல் உயிரின் ஆற்றலை என்னென்பது.

கல்லைச் சிற்பமாக வடிக்கின்ரன் சிற்பி, பலவகை நிறங்களின் வண்ணக் கலவையே ஓவியமாக உருவாகிறது. அதுபோல உயிர் என்ற கலைஞனும் இலைகளுக்கு வடிவமும் வண்ணமும் மலர்களுக்கு மணமும் நிறமும் கொடுக்கின்ரன். புள்ளினங்களுக்குப் பாட்டுக் கற்றுக் கொடுக்கும் பாணனும் அவ்வுயிரே. கனிகளுக்குச் சுவையூட்டுவதும் மலர்களுக்கு மணமூட்டுவதும் அவ்வுயிரே. சுருங்கச் சொன்னல் வாழும் பொருள்களுக்கு வடிவம் கொடுப்பது உயிர் ஒன்றுதான்.

உயிர் என்பது என்ன என்று உணர இயலாத போதும் அவ்வுயிரின் ஆற்றலைத் தாங்கி இயங்கும சில அணுக்களை நம்மால் காண இயலுகிறது. கண்ணிற்குப் புலப்படாத இவ்வுயிரணுக்களின் ஆற்றல் வியக்கத தக்கதாக உள்ளது. இவ்அணுக்களை உயிரின் கரு என்று கூறலாம். உயிர்ப் பொருளை இயக்கி வருவன இவ்வணுககளே. விலங்காலுைம, மனிதனுலும் இவ் வுயிரணுக்கள் இன்றி உயிர்வாழ்தல் இயலாது. இவ்வுயிரணுக்கள் தங்கள்வலிமையை இழந்துவிடும்போதுதான இறப்பு நேர்கின்றது. வியத்தகு ஆற்றலுள்ள இவ்வுயிரணுக்களின் படைப்பின் துவக்கம், விஞ்ஞானியால் விடைகாண இயலாதவற்றுள் ஒன்று. சர்வ வல்லமையுள்ள ஒரு சத்தியாலன்ரூ இது படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பறவை விலங்கினங்களுக்குள்ள இயற்கையறிவைக் காணும்போது சில நேரங்களில மனிதனுடைய பகுத்தறிவைக்கூட ஐயப்பட வேண்டியுள்ளது அவைகளுக்கு இந்த இயற்கை அறிவைக் கொடுததது யார்? சில கடல்வாழ் உயிர்கள் ஆண்டுக் கணக்கில் கடலில் வாழ்ந்திருந்து இறுதிக்காலத்தில் மீணடும் ஆற்றில் – தான் பிறந்த இடத்திற்கே வந்து சேர்கின்றன. பிறப்பும் இறப்பும ஓர் இடம், பிறப்... [illegible] ...தோரிடம். என்ன விந்தை!

"ஞான சம்பந்தம்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M.B. 5324
வட்டுக்கோட்டை கிழக்கு
அம்பலவாணர் கணபதிப்பிள்ளை
—வழக்காளி,

எதிராக

சங்கரத்தை.
வட்டுக்கோட்டை கிழக்கு
1. நாகன் கைம்பெண் சிவகாமி
2. நாகன் கந்தன்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 5324-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 1964-ம்ஆண்டு ஆடி மாதம 4-ம் திகதி (4-7-64) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 447-50சதம் இதில் ரூபா 300-க்கு 10-1-63 திகதி தொடக்கம் 27-5-63வரைக்கும் 100-ககு 10 வீத வட்டியும் அதாவது 27-5-63 திகதி தொடக்கம் மூழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-கது 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 142-86 சதம். அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 98-76 சதம். வெலியாத்துச் செலவு ரூபா 25-80 சதம். வரும் செலவு ரூபா 18-90 சதம். இதில் ரூபா 200 கழிவு.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை "மாரிபுலம்" என்னும் காணி கில. பர. 7⅜. இதில் கிணறு உண்டு. எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கதிரன் செல்லனும், பதம் கைம்பெண் வல்லி, மேற்கு அருணசலம் பொன்னையாவும். தில்லையம்பலம் மனைவி அன்னப்பிள்ளை, தெற்கு முருகன் நாகன். இதில் பிரிக்கப்படாத கில. பர. 1-ம் 17 5/8 குழியும் உண்டு,

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
நம்-35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 46 29-5-64.

## இவ்வாரம் உங்கள் பலன்?

31-5-64 — 6-6-64

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நிம்மதியீனம், நண்பர்கள் இனத்தவர்களுடன் மோதல் பணமளவில் ஓரளவு நன்மை என்பன உண்டாம். அந்நியர் அயலவர் மிக உதவுவர்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

செலவுகள் பெருகும், தேவையற்ற கண்டனங்களுக்குள்ளாதல், சிறு சுகவீனங்கள், வசைபரப்புவோர் தொல்லை என்பன உண்டாம்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் 3ம் பாதம்.

முதலிரு நாட்களும்எச்சரிக்கை. மிகுதி நாட்கள் வியாபார அலுவல்களுக்கு ஏற்றவை. நிலபுலன்களால் இலாபம் உண்டாம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

முதலிரு நாட்களும் சார்பானவை. செவ்வாய் புதன் வியாழன் காலை எச்சரிக்கையுடன் கழியவேண்டும். மிகுதி நாட்கள் சாதகமானவை. நண்பர்கள் இடரிலிருந்து மீட்பர்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்ப நெருக்கடியும் இனத்தவரால் பணத்தொல்லையும், தொழிற் சிறப்பும். வியாழன் மாலை, வெள்ளி சனிக்கிழமைகளில் குடும்பத்தில் தொல்லையும் ஏற்படும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

அதிக கண்டனங்களுக்குள்ளாதலும், சொந்தஅலுவலில் எதிர்க்கப்படுதலும் இறுதியில் எதிரிகளை நீர் வெல்வதும் தந்தைவழி உறவினர் தொல்லையும், தொழில் நன்மையும் உண்டாம்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உணர்ச்சி உந்தலால் தொல்லைகளும், குடும்ப அலுவல்களில் இடர்களுக்குள்ளாதலும், உடல் நிலையும் திருப்தியற்றிருந்தாலும், நிச்சய பண இலாபப்பேறும் நிகழும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருக்கக் காண்பீர். புது முயற்சிகள் தடங்கல்படும், தாயாருக்குச் சுகவீனமுண்டாம். வழக்குகள்பற்றி எச்சரிக்கை.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பகோளத்தில் சில சந்தேகங்களுக்கிடமுண்டு. சுகவீனமும் உண்டாம். ஆனல் பண இலாபமும் எதிரிகளுக்கு இடையூறும் நிச்சயம்.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

சண்டைக்கு முந்துவீர். இனத்தவருடன் மோதலேற்படும். ஆனல் எதிரிகளால் உம்மை வெல்ல முடியாது.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

நிம்மதியிருக்காது, வாகனங்களாற் தொல்லை செலவு உண்டாம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம். நிலபுல இலாபம் நிச்சயம்,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பழைய முதலீடுகளால் அதிக இலாபமும் புகழும் சமூகவெற்றியும் அதனுல் நிம்மதியீனமும் ஏற்படும். சச்சரவுகளும் சந்தேகங்களும் ஏற்படலாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டில்

உவில்மெற் கனகசுந்தரம் மேதர் கைம்பெண் மகேஸ்வரி, மானிப்பாய்,
வழக்காளி

இல. M, B, 3002
Vs
சின்னட்டி கோவிந்தன், தன்னை, மானிப்பாய்.
—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 3002-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பினனல் விபரிககப்படும் காணி 1964-ம் ஆணி மாதம் 29-ந் திகதி திங்கட் கிழமை காலை பத்து மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதலும் வட்டியும் ரூபா 1510-55 சதமும் 25-8-59 துவக்கம் 12-11-59 வரைக்கும் ரூபா 1000 க்கு நூற்றுக்குப் பத்து வீத வட்டியும இன்னும் 12-11-59 தொடக்கம் தீர்வை வரைக்கும் கூட்டிய தொகைக்கு முழுத் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182-55 சதமும் (ஏற்பட்ட செலவு ரூபா 117-15 வெலியாத்தச் செலவு ரூபா 40-65 சதம். இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபா 24-75சதம்) இதில் தீர்வைக்கு முதல் இறுதத ரூபா 865-ம் தீர்வைக்குப் பின் இறுத்த ரூபா 135-ம் நீக்கி மிகுதி.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று உடுவில் 'யம'' பர. கில. இலா. 5 குளி 16 கிணறும், கிணற்றில் ஆறிலொரு பங்குத் தண்ணீர் வழமைபோல் காலையில் இறைக்கக்கூடிய உரித்தும் கனகலிங்கம் ராசலிங்கததிற்கும் வயித்தி நாகமுத்துவிற்குரிய கிணறுப் பங்கும் பிறநீங்கலாக, வழிவாய்க்கால்ப் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கும் வடக்கும் கனகலிங்கம் இராசலிங்கத்திற்குரிய வாதனம், மேற்கு வயிததி நாகமுத்துவினுதனம், தெற்கு ஒழுக்கை.

க. பொன்னுத்துரை
கொம்மிஷனர்,
[illegible] 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்,
[illegible]

## கோட்டு விற்னவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. M-B, 4784
புகையிரத வீதி, யாழ்ப்பாணம்
1. அந்தோனிப்பிள்ளை வேலித்தோ யோனும் மனைவி
2. மோரி சிலீயாவும்
—வழக்காளிகள்

எதிராக

பாசையூர்
1. மடுதோசு பிலிப்புப்பிள்ளையும மனைவி
2. ஞானம்மாவும்
சிறும்பியடி, யாழ்ப்பாணம்
3. இளையதம்பியின் மகள் தங்கமுத்து —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4784-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஆதனம் 1964-ம்ஆண்டு ஆடி மாதம் 4-ந்திகதி (4-7-64) சனிச்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 9867-ம். இதில் ரூபா 6500-க்கு 2-5-1962 திகதி தொடக்கம் 29-11-1962 திகதி வரைக்கும் 100-க்கு 12வீத வட்டியும், அதாவது 29-11-1962 திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 290-07½ சதம், அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 202-62½ சதம். வெலியாத்துச் செலவு ரூபா 52-35 சதம். வரும் செலவு ரூபா 35-10 சதம்.

ஆதன டாப்பு:

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை 'விழாகுளம் புலம்'' என்னும் காணி கில,பர,4-ம்6 2/3குளியும், இதில் புது வீடு கட்டப்பட்டுள்ளது. வேறு பயிர்களும் உண்டு, எல்லை கிழக்கு சென் அந்தோனியாஸ்கோயிலும், வடக்கு முடிக்குரிய குளம், மேற்கு யோசேப் அருளப்பு, தெற்கு சவிரிமுத்து துரைச்சாமியும் மனைவி திரோசம்மாவினதும், சூசைப்பிள்ளையினது ஆதனமும் உண்டு. பதிவு இலக்கம்: D 236/295.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M 47 29-5-64.

## காலமானர்

நல்லூர்ச் சாதன பாடசாலைத் தலைமையாசிரியரும், சமூகசேவகரும், பத்திரிகாசிரியரும், எழுத்தாளரும், கவிஞருமான திரு. க. பே. முத்தையா("விடிவெள்ளி") அவர்கள், திடீரென ஏற்பட்ட சுகவீனங் காரணமாக (26-5-64) செவ்வாய்க் கிழமை பி. ப. 2-10 மணிக்குக் காலமானர். சமரச மனேபாவமும் சுயநலமற்ற சேவையும் அணிகளாக வாய்க்கப்பெற்ற பெரியாராகிய அவரை இழந்தமை ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அவரை இழந்து தவிக்கும், உறவினர்க்கும், நண்பர்க்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்கள் உரியவாகுக. ——

## திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை மகோற்சவம்

திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசை மகோற்சவம் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகளாதீனத்தில் 24-5-64 தொடக்கம் 28-5-64 முடியச் சிறப்பாக நடைபெற்றது. விநாயகர் வழிபாடு, மடாலய முருகக் கடவுள்வழிபாடு திருவவதாரம், திருமுலைப்பா லருந்துதல், திருஞானசம்பந்த சுவாமிகள் அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் தங்கச் சிவிகையில் எழுந்தருளல், திருஞானசம்பந்த சுவாமிகள் சிவசோதியுட்கலத்தல். மாகேசுர பூசை முதலிய நிகழ்ச்சிகள குறித்த தினங்களிலும் முறையாக ஷெ மகோற்சவத்தில் இடம் பெற்றன. ——

## பாராட்டு விழா

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில்நீண்டகாலமாக தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆ. கந்தையா அவர்களுடைய சேவை நலத்தைப் பாராட்டும் விழா வித்தியாசாலை மண்டபத்தில் திரு.அ.இளையதம்பி அவர்கள் 22-5-64 ல் அன்று சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் சைவபரிபாலனசபைக் காரியதரிசி திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கள் திரு. சி. பொன்னுத்துரை முதலியவர்கள் திரு. அ. கந்தையா அவர்கள் சைவாபிமானத்தையும் கடமையுணர்ச்சியையும், வித்தியாசாலை அபிவிருத்திக்கு அவராற்றிய தொண்டினையும் பாராட்டி உரை நிகழ்த்தினர்கள். ——

## வெளியீட்டு விழா

திரு செ. தனபாலசிங்கம் B.A. அவர்கள் ஆக்கிய 'முருகன் மணவாளன்' நூலின் வெளியீட்டுவிழா உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயில் மண்டபத்தில் 27-5-64 புதன் மாலை 6 மணியளவில் கலாநிதி ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நூலின் வருவாய் முழுவதும் ஷெ ஆலயத் திருப்பணிக்கே காணிக்கையாக்கப்படும். ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல. M.B. 4938

மானிப்பாய்
1. சிவலிங்கம் குருசந்திரனும் மனைவி
2. சரோஜனிதேவியும்
—வழக்காளிகள்

எதிராக

மானிப்பாய் கட்டுடை
காகமுத்து கந்தையா
—எதிராளி

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவின்படி கீழ்ககாணும் ஆதனங்கள் 1964-ம் மீ யூலாய் (ஆடி)மீ 11உ (11-7-64, சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1488-75சதமும், 16-7-62 தொடக்கம் 14-12-62 வரைக்கும் ரூபா 1000-க்கு வருடமொன்றுக்கு 9%வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 177-37 சதமும், இதில் ரூபா 100 கொடுபட்டிருக்கிறது,

ஆதன விபரம்:

1· வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று சண்டிலிப்பாய் இறை "கோம்பி தோட்டம்" நிலப்பரப்பு 3, குளிகள் 14. வீடும், கிணறும், பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, தற்போது ரோட். வடக்கு கனகரெத்தினம் மனைவி வடிவாம்பிகையினுதனம், மேற்கு மயிலன் வல்லி, தெற்கு பின்வரும் 2-ம் ஆதனம். பதிவு E 242/34,

2. ஷை சண்டிலிப்பாய் இறை "தண்ணீர்ப் பனையடி" நிலப்பரப்பு 3. பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை தற்போது ரோட், வடக்கு மேலே சொல்லப்பட்ட 1-ம் ஆதனம், மேற்கு மயிலன் வல்லிக்கும், சந்திரசேகரம் மனைவி சௌந்திர நாயகத்தினுதனமும் பின்வரும் 3-ம் ஆதனமும், தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கு, வழிவாய்க்காலுடன் இவ்வாதனத்தில் சொரியலாய் ¼ பங்கு. பதிவு E 292/223.

3, ஷை சண்டிலிப்பாய் இறை 'தண்ணீர்ப் பனையடியும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 5, குளிகள் 1 1/2, கிணறும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, தற்போது ரோட், வடக்கு மேலே சொல்லப்பட்ட 2-ம் ஆதனம், மேற்கு சந்திரசேகரம் மனைவி சௌந்திரநாயகத்தினுதனம், தெற்கு கணபதி சுந்தரத்தினுதனம். இந்தக் கிணற்றில் வடக்கெல்லைக்காணிக்குரிய பங்கு வழிவாய்க்கால் புறநீங்கலாக. இவ்வாதனத்தில் சொரியலாய் குளிகள் 14 5/8, அதைச் சேர்ந்தவைகளும். பதிவு E 292/224.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
463 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 23-5-64.

M 51 29-5-64

## ஆதிபரமாசாரிய சுவாமிகள்

தருமபுர ஆதீன ஆதிபரமாசாரிய சுவாமிகளின் குருபூசை 1-6-64 அன்றும் மறுநாள் பகல் மாஹேஸ்வர பூசையும், இரவு பட்டணப் பிரவேசமும் நடைபெறுவதாக இருக்கிறது.

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் பிரதான வீதி 65-ம் இலக்கத்தில் அடைவு பிடிக்கும் திரு. அ. ச. மகாதேவா அவர்களிடம் 1958-ம்ஞு பங்குனிமீ 20உ தொடக்கம் 1959-ம்ஞு ஏப்பிரல்மீ 8உ வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 1964-ம்ஞு யூன்மீ 12உ (12-6-64) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. சே. குட்டிப்பிள்ளை,
Court Commissioner & Valuer
643 காங்கேசன்துறைவீதி
யாழ்ப்பாணம். 20-5-64.
M. 45 22, 29-5-64.

## இரண்டாவது சொற்பொழிவு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் திரு. சு. நடேசபிள்ளை அவர்களால் இரண்டாவது சைவ சித்தாந்தச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

## சாரணர் விழா!

சென்ற 27-5-64 புதன் கிழமை மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சாரணர் குழுவினரால் மேற்படி கல்லூரியில் சாரணர் விழாக் கொண்டாடப் பெற்றது

## யாழ். சைவபரிபாலனசபை ஆதரவில் சமயப்பிரசாரம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் 29-5-64 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கைதடி வயோதிபர்சாலையில் காரைக்கால்அம்மையார் என்னும் விடயம் பற்றி திரு. த. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றுவார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிறுப்பிட்டி
1. வேலுப்பிள்ளை கனகசபை
—வழக்காளி

M.B. 4308

எதிராக

சிறுப்பிட்டி தெற்கு
1. மயில்வாகனம் ஸ்ரீ. பத்மநாதன்
2. மயில்வாகனம் சதாசிவம்
3, பெண் நகுலேஸ்வரி
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 4308-ம் இலக்க வழக்கில் எனக்குககிடைதத கோட்டுக கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 1, 2, 3, 4, 5 துண்டுக் காணி 1964ஞு ஆடிமீ 4உ 4-7-64) சனிககிழமை முற்பகல் 8, 8½, 9, 9½, 10 மணி தொடக்கம அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் ரூபா 4540, இதில்ரூபா 3000 க்கு 2-10-1961 திகதி தொடக்கம் 2?-5-1963 திகதிவரைககும் 8வீத வட்டியும் பின்திகதி 24-5-1963 திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைககும் 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 354-55 சதம்.

காணிகளின் விபரம்

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புததூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை கடளாப்பறுகும் கூளாக கலட்டியும் நிலப்பரப்பு 3 1¾. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடககு பூததம்பியின் உரிததாளிகளின் ஆதனங்கள், மேற்கு பொன்னுச்சாமி மயில்வாகனததின் உரிததாளிகளின் ஆதனங்களும் பொன்னுச்சாமி வயித்திலிங்கததின் ஆதனமும், தெற்கு வயித்திலிங்கம பொன்னுச்சாமயின் ஆதனம். இதடங்கலில் சொரியலாய் ½வாசி விற்கப்படும் முற்பகல் 8 மணிககு.

2, புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை கூளாப்பறுகு குடியிருப்பு நிலப்பரப்பு 8, எல்லை கிழககு V, தம்பிப்பிள்ளைக்குரியஆதனம். வடககும் மேற்கும் பொன்னையா பெண் நாகமுததுவின் ஆதனங்கள், தெற்கு கந்தையா வயிததிலிங்கத்தின உரிததாளிகளின் ஆதனங்களும் மற்றவர்களின் ஆதனஙகளும இதடங்கலில் சொரியலாய் ½வாசி விற்கப்படும். முற்பகல் 8½ மணிககு.

3 புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை. கூளாக்கலட்டி. நிலப்பரப்பு 25. எல்லை கிழககு பூததம்பியின் உரிததாளிகளின் ஆதனங்கள், வடககு ஆறுமுகததின் உரிததாளிகளின ஆதனங்களும், மேற்கு ஆறுமுகததின் உரித்தாளிகளின் ஆதனங்கள், தெற்கு கல்லூததறை இதடங்கலில் சொரியலாய் ½வாசி முற்பகல் 9 மணிககு விற்கப்படும்,

4. கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை தட்டான்திட்டி நிலப்பரப்பு 50. எல்லை கிழககு இராமலிங்கம் பெண் தெய்வானைப்பிள்ளையின் உரித்தாளிகளின் ஆதனங்கள், வடககும் மேற்கும் தெற்கும் மயில்வாகனம் பூதத்தம்பியின் உரித்தாளிகளின் ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் ½வாசி விற்கப்படும், முற்பகல் 9½ மணிககு,

5. கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை பத்தன்வெளளி நிலப்பரப்பு 107¼. எல்லை கிழக்கு மகாகணபதிப்பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம், வடக்கு எதிராளிகளின் ஆதனமும், பங்காளரின் ஆதனமும், மேற்கு மயில்வாகனம பூதத்தம்பியின் உரிததாளிகளின் ஆதனங்கள், தெற்கு ஒழுங்கை. இதடங்கலின் சொரியலாய் ½வாசி விற்கப்படும் முற்பகல் 10 மணிக்கு.

ந. ஆறுமுகம்,
கொமிசனரும் விலைமதப்பாளரும்,
வெததிஸ்மேஸ்தரும்.
சித்தங்கேணி

M 53 29-5-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

தொண்டமனுறு
1 கந்தசாமிஐயர் கைம்பெண் மனோறஞ்சிதம்
— வழக்காளி

எதிராக

புத்தூர் மேற்கு புத்தூர்
1 இளையதம்பி மாரிமுதது
2 சங்கரப்பிள்ளை கதிரவேலு
3 காராளி சுப்பையா
எதிராளிகள்

M, B 2514

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 2514 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் எட்டுத் துண்டுக் காணிகள்

1 1964-ம் ஆ. ஆடி மீ 25-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் கீழ்க்காணும் ஆதன டாப்பிலுள்ள ஒழுங்கின் படிக்கு முதல் நான்கு காணிகளும்,

2 1964-ம் ஆண்டு ஆவணி மீ 1-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் கீழ்க்காணும் ஆதனடாப்பிலுள்ள ஒழுங்கின் படிக்கு 5-ம் காணியிலிருந்து 8-ம் காணிகளும் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 9650 இன்னும் ரூபா 7000 க்கு 27-10-56 தொடக்கம் 8-7-59 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 150-ம்.

ஆதன டாப்பு

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்கிழக்கு புத்தூர்க் கோயிற்பற்று ஆவரங்காலிறை "நடுச்செட்டிபுலம் பர. நில இலா. 5-0 இதற்கெல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை நாகலிங்கத்தினுதனம் வடக்கு கணபதிப்பிள்ளை இளையதம்பியினுதனம், மேற்கு சிவப்பிரகாசம் பெண் தங்கம்மாவுக்கும் செல்வச்சந்நிதி கோவிலுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சிவப்பிரகாசம் பெண் தங்கம்மாவுக்குரியவாதனம், இதடங்கலில் "பர. நில. இலா 1 4 1/2 குளி

2 ஷை இறை "பாற்கரை" பர, நில. இலா. 40 பனைமரங்களுடன் இதற்கெல்லை கிழக்கு முதலாம் எதிரியினுதனம், வடக்கு சரவணமுத்து மாணிக்கவாசகருக்கும் மற்றவர்கட்குகுரியவாதனம், மேற்கு சின்னர் வல்லிபுரம் பெண் கதிராசிக்கும் முதலாம் எதிரிக்குமுரிய வாதனம் தெற்கு பொன்னுச்சாமி கைம்பெண் அரியநாயகத்துக்குரியவாதனம் இதடங்கலில் பர நில இலா 10.

3 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு அச்சுவேலிக் கோயிற்பற்று "தப்பனை" பர. நில இலா 15 செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கி அப்புக்குட்டி பெண் வள்ளிப்பிள்ளையினுதனம், வடக்கு வெற்றிவேலு பெண் ஆத்தைப்பிள்ளையின் ஆதனம், மேற்கு முதலாமெதிரியின் ஆதனம் தெற்கு சீனியன் கோனின் உரித்தாளருக்குரியவாதனம் இதடங்கலும் தென்மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பாவிப்புரிமையும், அக்கிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்காலுரித்தும்.

4 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர்க் கோவிற்பற்று ஆவரங்காலிறை "கொக்கொவிடை" பர. நில. இலா. 6—11 குளி. செய்பயிர் வான்பயிர்களும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பாவிப்புரிததும் அக்கிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்காலுரித்தும் எல்லை கிழககு வேலு கதிர்காமூவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம் வடக்கு மாப்பாணி கைம்பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம் மேற்கு வைரவநாதர் ஆறுமுகத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், இதடங்கலில் 1/18 பங்கு.

5 ஷை இறை "கெக்கவிடை" பர நில இலா 2—16 குளி செய்பயிர் வான்பயிர்களும மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பாவிப்புரித்தும் அக்கிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்காலுரித்தும், இதற்கெல்லை கிழக்கு கோனர் பூதம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கு கதிரேசுவின் மகள் தங்கத்துக்கும் மற்றவர்கட்குமுரியவாதனம். மேற்கு முருகர் தம்பிமுத்துவுக்கும் மற்றவர்கட்குமுரியவாதனம், இதடங்கலில் 8 குளி.

6 ஷை இறை "கொக்கனேடை"பர. நில இலா, 26 3/4 இதற்கெல்லை தம்பர் விசுவலிங்கத்தினுதனம், வடக்கு வேலு கதிர்காமருக்கும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு மேற்சொல்லிய 4-ம் ஆதனம் தெற்கு கோனர் பூதப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலில் 1¼ பரப்பு,

7 ஷை இறை "கண்டமாலை பர. நில, இலா 10 குளி இதற்கெல்லை கிழக்கு தம்பிமுத்து அரியகுட்டிக்கும மற்றவர்கட்குமுரியவாதனம். வடக்கும் மேற்கும் குமாரசாமி பெண் மீனட்சிப்பிள்ளைக்குரிய வாதனம், தெற்கு சிவஞானம் பெண் தங்கம்மாவுக்குரிய வாதனம் இதடங்கலில் ¼ பங்கு,

8 ஷை இறை "புதியரகண்டமாலை பர நில இலா 15. இதற்கெல்லை கிளக்கு முடிக்குரிய வாதனம், வடக்கு மாரிமுத்து கைம்பெண் சிவகாமியினுதனம், மேற்கு பொன்னுச்சாமி கைம்பெண் அரியநாயகத்தின் ஆதனம் தெற்கு குமாரசாமி மீனட்சிப்பிள்ளைக்கும் மேற்சொல்லிய 7-ம் ஆதனம். இதடங்கலில் 1/4 பங்கு,

செ. விசாகரெத்தினம்,
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
133 பருத்தித்துறைறோட்டு 113,
கல்லூர், யாழ்ப்பாணம், 23-5-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 5255

நாகலிங்கம் கைம்பெண்
சிவக்கொழுந்து — கரம்பன்
— வழக்காளி

எதிராக

கறுப்பர் தேவர் மூத்துச்சாமி
கரம்பன் —எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M. B. 5255-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத் கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1964-ம் ஆண்டு ஆடிமாதம் 11-உ சனிக்கிழமை முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா. 1370/67-ம். 29-11-62 தொடக்கம் 4-3-63 வரையில் ரூபா 1000-க்கு 12 வித வட்டியும், அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரையில் முழுக்கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 177-07½ யும், இதில் ரூபா 500/- 7-9-63ல் கட்டப்பட்டது, செலவாலும் ரூபா 100 கொடுக்கப்பட்டது,

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவில்பற்று கரம்பனிறை "தாலிக்காடு" செல், பர, இலாச்சம் 17, குளி 6½. இந்தக் காணிக்கு எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு மரியாம்பிள்ளை முத்தையாவினதும் பங்காளர்களுடையவும் ஆதனங்கள், மேற்கு ஒழுங்கையும் அடக்கலமுத்து கைம்பெண் மாணிக்கம்மாவினதும் ஆதனம், தெற்கு அடக்கலமுத்து கைம்பெண் மாணிக்கம்மாவினதும் மூத்துச்சாமி பெண் ஐயாத்தைப்பிள்ளையின் ஆதனங்கள், இதடங்கலும். முற்பதிவு C 302/211·

க, செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 27-5-64.
M 48. 29-5-64.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை [illegible] 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 29-5-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org